கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 127 | 12-11-2025 | புதன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 127 | 12-11-2025 | Wednesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## டெல்லி குண்டுவெடிப்பு சதிகாரர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்: பிரதமர் மோடி



திம்பு (பூட்டான்): நவ.12–

டெல்லியில் நடந்த கொடிய கார் குண்டுவெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் உள்ளவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

இரண்டு நாள் அரசு பயணமாக பூடான் நாட்டுக்கு சென்றுள்ளார் பிரதமர் மோடி. அங்கே திம்புவில் நடந்த ஒரு நிகழ்வில் அவர் பேசுகையில், "இன்று, நான் மிகவும் கனத்த இதயத்துடன் இங்கு வந்துள்ளேன். நேற்று முன்தினம் மாலை டெல்லியில் நடந்த கொடூரமான சம்பவம் அனைவரையும் மிகவும் வருத்தப்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் துயரத்தை நான் புரிந்துகொள்கிறேன். இன்று முழு தேசமும் அவர்களுடன் நிற்கிறது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தும் அனைத்து நிறுவனங்களுடனும் நான் நேற்று முன்தினம் இரவு முழுவதும் தொடர்பில் இருந்தேன். எங்கள் விசாரணை அமைப்புகள் இந்த சதித்திட்டத்தின் காரணத்தை கண்டுபிடிக்கும். இதற்குப் பின்னால் உள்ள சதிகாரர்கள் தப்பவிடப்பட மாட்டார்கள். இந்த கொடிய சம்பவத்துக்கு பின்னால் உள்ள அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்" என்று கூறினார்.

முன்னதாக, நாட்டின் முன்னணி புலனாய்வு அமைப்புகள் டெல்லி குண்டுவெடிப்பு வழக்கில் விரைவான மற்றும் முழுமையான விசாரணையை நடத்தி வருவதாகவும், இச்சம்பவத்துக்கு காரணமானவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார்.

நடந்தது என்ன? டெல்லி செங்கோட்டை அருகே நேற்று மாலை கார் ஒன்று பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியதில் 13 பேர் உயிரிழந்தனர். 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். டெல்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் தற்கொலை தாக்குதல் நடத்தியவர் என்று சந்தேகிக்கப்படும் மருத்துவர் உமர் முகமதுவின் புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது. திங்கள் கிழமை மாலை செங்கோட்டை அருகே வெடித்துச் சிதறிய வெள்ளை நிற ஹூண்டாய் ஐ20 காரை உமர் இயக்கிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் உள்துறை செயலர், உளவுத்துறை இயக்குநர், டெல்லி போலீஸ் கமிஷனர் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

## "திருக்கோவில் அர்ச்சகர்கள், பணியாளர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகள்: முதல்அமைச்சர் வழங்கினார்



சென்னை. நவ. 12–

சென்னை மாவட்டம், தங்கசாலை, ஏகாம்பரேசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில், சைதாப்பேட்டை காரணீசுவரர் திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்டம், கிருஷ்ணன்கோவில் கிருஷ்ணசாமி திருக்கோயில், செங்கல்பட்டு மாவட்டம், திருநீர்மலை ரெங்கநாதப் பெருமாள் திருக்கோயில், தருமபுரி மாவட்டம், குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய 6 திருக்கோயில்கள் சார்பில் ரூ.10.65 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகளில் 16 அர்ச்சகர்கள் மற்றும் 31 பணியாளர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டன. ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகளை தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்கினார். தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை. இரவிச்சந்திரன், பொ. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்து சமய அறநிலையத்துறையானது திருக்கோயில்களை புனரமைத்து குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளோடு, திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் நலன்களை பாதுகாத்திடும் வகையில் தமிழர் திருநாளை முன்னிட்டு 2 இணை புத்தாடைகள்/சீருடைகள், துறை நிலையிலான மற்றும் சேமநல நிதியின் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் உயர்வு, பொங்கல் கருணைக் கொடை, குடும்ப நலநிதி உயர்வு, ஒருகால பூசைத் திட்ட அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை, அவர்தம் பிள்ளைகள் உயர்கல்வி பயில ரூ.10,000/ கல்வி உதவித்தொகை, அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள், கட்டணமில்லா முழு உடற்பரிசோதனைத் திட்டம் என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 632 குடியிருப்புகள் கட்டுவதற்கு பணிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. அவற்றில் 95 அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் நிறைவு பெற்றுள்ளன. அவற்றிற்கான ஒதுக்கீட்டு ஆணைகள் திருக்கோயில் அர்ச்சகர்களுக்கும், பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.",

## குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளையும் அரசு வழங்கும்: டெல்லி முதல்வர்



புதுடெல்லி: நவ.12–

குண்டுவெடிப்பில் பாதிக்கப் பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அரசு அனைத்து வகையான உதவிகளையும் வழங்கும் என்று டெல்லி முதல்வர் ரேகா குப்தா உறுதியளித்துள்ளார்.

டெல்லியில் நேற்று முன்தினம் மாலை நிகழ்ந்த குண்டுவெடிப்பில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர், பலர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டு, அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய டெல்லி முதல்வர் ரேகா குப்தா, "இது ஒரு துரதிருஷ்டவமான சம்பவம். இது தொடர்பாக அனைத்து விசாரணை அமைப்புகளும் விசாரணையை மேற்கொண்டு வருகின்றன. காயமடைந்தவர்களை நாங்கள் நேற்று மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அனைத்து உதவிகளையும் அரசு வழங்கி வருகிறது. அவர்கள் எந்த பிரச்சினையையும் எதிர்கொள்ள மாட்டார்கள்." எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்று அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "செங்கோட்டை அருகே நடந்த கார் குண்டுவெடிப்பு மிகவும் வேதனையானது, கவலை அளிக்கக்கூடியது. இந்த துயர விபத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்.


பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. டெல்லி காவல்துறை, என்எஸ்ஜி, என்ஐஏ, எஃப்எஸ்எல் ஆகிய பாதுகாப்புப் படைகள் இணைந்து முழு சம்பவத்தையும் விசாரித்து வருகின்றன.

டெல்லி ஜே.பி. மருத்துவனைக்கு சென்று விபத்தில் காயமடைந்தவர்களை சந்தித்து அவர்களின் உடல்நிலை குறித்து விசாரித்து, அவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்தினேன். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் எந்த பற்றாக்குறையும் இல்லை. தேவையான அனைத்து மருத்துவ வசதிகளும் உடனடியாகவும் அவசரமாகவும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்." என தெரிவித்திருந்தார்.

இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக சட்டவிரோத தடுப்புச் சட்டம் (உபா), குண்டுவெடிப்பு சட்டம், பாரதிய நியாய சன்ஹிதா ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதியப்பட்டுள்ளதாக டெல்லி போலீஸார் தெரிவித்துள்ளனர். சட்டவிரோத தடுப்புச் சட்டம் பிரிவு 16 மற்றும் 18, குண்டு வெடிப்புச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகள், பாரதிய நியாய சன்ஹிதா ஆகிய சட்டங்களின் கீழ் டெல்லி கோட்வாலி காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர் என போலீஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகப்படும் நபரின் நகர்வுகள், ஃபரிதாபாத் பல்கலைக்கழகத்துடனான அவரின் தொடர்புகள், குண்டுவெடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் ஆகியவை குறித்து போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இந்த சம்பவம் தொடர்பாக டெல்லியில் உள்ள தனது இல்லத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

## 13 முறை எஸ்.ஐ.ஆர் நடந்துள்ளது; திமுகவுக்கு மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம்



"கோவை, நவ.12–

கோவை முதலிபாளையத்தில் தனியார் மண்டபத்தில் பாஜக நிர்வாகிகள் மத்தியில் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பேசுகையில், மத்தியில் ஆளும் பாஜகவின் திட்டங்கள் பெண்களை முன்னிறுத்திய உள்ளன. பிரதமர் அறிவிப்பை தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து சட்டங்களையும் நிறைவேற்றுகிறார்கள். பிரதமர் மோடிக்கு நல்ல பெயர் வந்துவிடக்கூடாது என அவரது திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். பேரவையில் பலம் இருக்கிறது என்பதால் பிரதமருக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுகின்றனர். ஜல்லிக்கட்டை நிறுத்தியது காங்கிரஸ், அதற்கு திமுக ஒத்துழைத்தது. ஜல்லிக்கட்டு தமிழக கலாசாரம் என அதை திரும்பக்கொண்டு வர நடவடிக்கை எடுத்தவர் பிரதமர் மோடி. பிஎம் ஸ்ரீ திட்டம் தேவை என கேரளா கேட்கிறது. இங்கு கல்வி என்றாலே எதற்கெடுத்தாலும் போராட்டம் நடத்துகிறது. நீட் மூலமாக ஏழைகள் படிக்கிறார்கள். அதை கொண்டு வந்தவர் பிரதமர் மோடி. ஆட்சிக்கு வந்ததும் நீட்டை தூக்கி எறிவோம் என்றார்கள். கிராமப்புற மாணவர்கள் கூட தேர்ச்சி பெறுகிறார்கள். மத்திய அரசின் திட்டங்கள் தமிழகத்திற்கு கிடைக்கவிடாமல் செய்யும் திராவிடக்கட்சி திமுக. மத்திய அரசை மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதால் அதன் திட்டங்களை எதிர்க்கின்றனர். மாநில அரசு கட்டும் வரியை எப்படி அந்த மாநிலத்திற்கே முழுமையாக திருப்பி தர முடியும்? வன்மத்தோடு நடக்கும் ஆட்சியை கேள்வி கேட்போம். இங்கு வன்மத்தோடு நடக்கும் திமுக ஆட்சியை, கேள்வி கேட்கும் திறமையை வளர்க்க வேண்டும் என்றார். அதனை தொடர்ந்து கோவை முதலிபாளையத்தில் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது: தீபாவளிக்கு பிறகு ஜிஎஸ்டி வரி குறைப்பு மக்களுக்கு பலன் தந்துள்ளது. ஒவ்வொரு முறையும் எஸ்.ஐ.ஆர் செய்ய வேண்டிய கடமை தேர்தல் ஆணையத்துக்கு உண்டு. இறந்தவர்களை பட்டியலில் வைக்கலாமா? அல்லது வெளியூர் சென்றவர்கள் ஓட்டு பட்டியலில் இருக்கலாமா? என்பதை தேர்தல் ஆணையம் ஆய்வு செய்கிறது. நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது நடந்த எஸ்.ஐ.ஆர் தவறாக தெரியவில்லையா? 2000ம் ஆண்டுக்கு பிறகு 4 முறை எஸ்.ஐ.ஆர் நடந்திருக்கிறது. அப்போதெல்லாம் பிரச்சினை இல்லையா? 2000க்கு முன்பு 10 முறையும், அதற்கு பிறகு 3 முறையும் எஸ்.ஐ.ஆர் நடந்துள்ளது. 13 முறை எஸ்.ஐ.ஆர் நடந்துள்ளது. மத்திய அமைச்சரவையில் திமுக இருந்தபோதும் எஸ்.ஐ.ஆர் நடந்துள்ளது. ஒவ்வொன்றாக குறை கூறியவர்கள், இப்போது எஸ்.ஐ.ஆர் தவறு எனக்கூறுகிறார்கள். என்ன காரணத்துக்காக இவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் எனத்தெரியவில்லை? ஆட்சியின் தவறுகளை மறைக்க, மக்களை ஏமாற்ற, மக்களவை மடைமாற்றும் முயற்சி இது. தமிழ்நாடு முழுவதும் எஸ்.ஐ.ஆர் க்கு எதிராக போராட்டம் நடத்தியிருப்பது ஆச்சர்யமாக இருக்கிறது. அடுத்து வரும் தேர்தலில் தோல்வி உறுதி என தெரிந்தால், ராகுல் காந்தி வாக்கு திருட்டு என்கிறார். பாஜக வென்றால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் குறை; அவர்கள் வென்றால் கிடையாது.

இவ்வாறு அவர் கூறினார்.

## SIR-ஐத் தடுப்பதே நம்முன் இப்போதுள்ள ஆகப்பெரும் கடமை: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை: நவ.12–

'SIRஐத் தடுப்பதே நம்முன் இப்போதுள்ள ஆகப்பெரும் கடமை. தொடர்ந்து செயலாற்றுவோம். நம் மக்களின் வாக்குரிமையை பாதுகாப்போம்' என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது;

"ஒருபுறம், மக்களாட்சியின் அடிப்படையான வாக்குரிமையையே பறிக்கும் SIR எனும் ஆபத்துக்கு எதிராகச் சட்டப் போராட்டம் களப் போராட்டம்

மறுபுறம், தொடங்கப்பட்டுவிட்ட SIR பணிகளில் குளறுபடிகளைத் தடுத்திட வார் ரூம் உதவி எண்.

களப் போராட்டத்தில், நேற்று தமிழ்நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பதாகைகளை ஏந்தியும் கண்டன முழக்கங்களை எழுப்பியும் ஷிமிஸி எனும் பேராபத்துக்கு எதிராகக் கூடியுள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர்!

தொடர்ந்து செயலாற்றுவோம்! நம் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்போம்!" என பதிவிட்டுள்ளார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சிராப்பள்ளியில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக முதியோர் மனமகிழ் வள மையம் அன்புச்சோலை திட்டத்தை காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து திண்டுக்கல் பல்நோக்கு சமூக பணி மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் பெரியசாமி கலந்து கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம், இயக்குனர் ஜான் நெப்போலியன் உட்பட பலர் உள்ளனர்.

# அரசியல் கட்சிகளின் ரோடு ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க தமிழ்நாடு அரசுக்கு கூடுதல் அவகாசம்: ஐகோர்ட் உத்தரவு!

சென்னை: நவ.12–

அரசியல் கட்சிகளின் ரோடு ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க தமிழ்நாடு அரசுக்கு கூடுதல் அவகாசம் வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கரூரில் செப்டம்பர் 27ம் தேதி, தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து, அரசியல் கட்சித் தலைவர்களின் ரோடு ஷோ நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஏராளமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம், வழிகாட்டு விதிமுறைகளை 10 நாட்களில் சமர்ப்பிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்குகள், தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தன.

அப்போது, தமிழக அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், பொதுக் கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கான வரைவு வழிகாட்டு விதிமுறைகள் வகுப்பது தொடர்பாக அரசின் பல்வேறு மட்டங்களில் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்த வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து நவம்பர் 6ம் தேதி அனைத்து கட்சி கூட்டம் கூட்டப்பட்டதாகவும், இந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கொண்டுள்ள 20க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கியுள்ளதாகவும், தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 40க்கும் மேற்பட்ட கட்சிகளுக்கு வரைவு வழிகாட்டு விதிமுறைகள் அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களின் கருத்துக்கள் கோரப்பட்டுள் ளதாகவும் தெரிவித்தார்.

இந்த கருத்துக்களைப் பெற்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி இறுதி வரைவு வழிகாட்டு விதிமுறைகளை வகுக்க ஒரு மாத கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி, ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு விதமாக நிபந்தனைகள் விதிக்கப்படுகிறதா என்று கேள்வி எழுப்பினார். மேலும் கடைசி நேரத்தில் அனுமதி வழங்கப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தலைமை நீதிபதி சுட்டிக்காட்டினார். அரசியல் கட்சிகளுக்கு பொதுக்கூட்டம், ரோடு ஷோக்களுக்கு அனுமதி வழங்கும்போது தேவையில்லாத நிபந்தனைகளை விதிக்கக் கூடாது என்றும் 15 நாட்களுக்கு முன் விண்ணப்பிக்கும் பட்சத்தில் 5 முதல் 7 நாட்களில் முடிவெடுத்து தெரிவிக்க வேண்டும் என்றும் அரசுக்கு தலைமை நீதிபதி அறிவுறுத்தினார்.

அனைத்து கட்சிகளின் கருத்துக்களும் அரசின் வசம் உள்ள நிலையில் பதிவு செய்யப்பட்ட கட்சிகளான தவெக மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் வரைவு வழிகாட்டு விதிமுறைகள் குறித்த யோசனைகளை உடனடியாக அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதிகள், இந்த யோசனைகளைப் பரிசீலித்து 10 நாட்களில் அதாவது நவம்பர் 20ம் தேதி வரைவு வழிகாட்டு விதிமுறைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அரசுக்கு கூடுதல் கால அவகாசம் வழங்கி உத்தரவிட்டனர். இந்த வழக்கின் விசாரணையை நவம்பர் 21ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்ததிற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை சேலம் மாவட்டம், சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சூரமங்கலம் மண்டலம், முகில் நகர் முதல் தெரு பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

# சேலத்தில் முதியோர் மனமகிழ் வள மையம் திறப்பு. சேலம் சூரமங்கலம் மற்றும் கோரிமேட்டில் அன்புச்சோலை.



சேலம்:நவ.12–

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, 'அன்புச்சோலை' முதியோர் மனமகிழ் வள மையங்கள் சேலம் சூரமங்கலம், கோரிமேடு பகுதிகளில் தொடங்கப்பட்டன.

இத்திட்டத்தை, திருச்சி மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை தொடங்கிவைத்ததைத் தொடர்ந்து, சேலம் கோரிமேடு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகரில் உள்ள 'அன்புச்சோலை' மையத்தில் மாவட்ட ஆட்சியர் ரா.பிருந்தாதேவி தலைமையில், மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

மூத்த குடிமக்களின் நலன்கருதி 13 மாவட்டங்களில் 25 இடங்களில் பகல்நேர பராமரிப்பு மையமான 'அன்புச்சோலை மையங்கள்' தொடங்கப்படும் என பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் சூரமங்கலம் மற்றும் கோரிமேடு பகுதியில் 'அன்புச்சோலை' மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

பகல் நேரத்தில் முதியோருக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உறுதி செய்வதற்காகவும், தங்களது சம வயதினருடன் பழகுவதற்கான வாய்ப்பை வழங்குவதற்காகவும், பகல் நேரத்தில் தனிமையில் அவதிப்படுவோருக்கு ஆறுதல் அளிக்கவும், மூத்த குடிமக்களிடையே சமூக தொடர்புக்கான சூழலை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இம்மையம் காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை செயல்படும். இதில், மதிய உணவு மற்றும் மாலைநேர சிற்றுண்டி வழங்கப்படும். தகுதிவாய்ந்த பராமரிப்பாளர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் உடல்நல சிகிச்சையாளர்கள் மூலம் ஆரோக்கியத்துக்கான வசதிகள் வழங்கப்படும்.

தொலைக்காட்சி, தினசரி நாளிதழ்கள், மாத இதழ்கள், ஆன்மிக புத்தகங்கள், நாவல்கள், சிறுகதைகள், அறிவியல், இயற்கை புத்தகங்கள், சுகாதாரம், மற்றும் மருத்துவ புத்தகங்கள், உள்ளடக்கிய நூலக வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், அருகில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மூலம் மருத்துவ சேவைகள் வழங்கப்படும். சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், காற்றோட்டமான இடவசதி, சுத்தமான கழிவறை மற்றும் கண்காணிப்பு கேமரா வசதிகள் ஆகியவையும் 'அன்புச்சோலை' மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி துணை மேயர் சாரதா தேவி, மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் சுகந்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# நடிகர் அஜித் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை : நவ. 12–


சென்னையில் உள்ள நடிகர் அஜித்குமார் வீட்டிற்குவெடிகுண்டுமிரட்டல்விடுக்கப்பட்டுள்ளது. நடிகர் எஸ்.வி.சேகர், நடிகை ரம்யா கிருஷ்ணன் ஆகியோர் வீடுகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. போலீசார் சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரிய வந்தது.

# ஒரு மனிதர்... ஒரு ரூபாய்... என்ற புதிய திட்டத்தை அமல்படுத்திய பொள்ளாச்சி ஈமச்சடங்கு அறக்கட்டளை!!

கோவை நவ: 11

பொள்ளாச்சி ஈமச்சடங்கு அறக்கட்டளை சார்பில் ஒரு மனிதர் ஒரு ரூபாய் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அறக்கட்டளையின் ஒருங் கிணைப்பாளர் பரமேஸ் வரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மனிதனாக பிறந்தவர் ஒருநாள் இரக்க நேரிடும் அந்த சமயத்தில் அனைவரும் இறுதியாக ஈமச்சடங்கு செய்வது இயல்பான ஒன்று அப்படிப்பட்ட ஈம சடங்கிற்கு கூட பொருளை ஈட்ட இயலாத குடும்பங்களுக்கு இறுதியில் செய்யக்கூடிய ஈமச்சடங்கினை எங்களுடைய அறக்கட்டளையின் சார்பில் செய்து வருகிறோம்.



அந்த வகையில் எங்களுடைய அறக்கட்டளையின் நிர்வாகிகளின் ஆலோசனைப்படி ஒரு மனிதருக்கு ஒரு ரூபாய் நன்கொடையாக வழங்க வேண்டுகிறோம்.

இந்த தொகை பல்வேறு ஆத்மாக்களை நல்லடக்கம் செய்வதற்கான ஒரு பெரும் பங்கு வகிக்கும் எனவும் இந்த தொகையின் மூலம் கிடைக்கின்ற பொருளாதரத்தை ஆம்புலன்ஸ்,ப்ரீசர் பாக்ஸ் மற்றும் ஈமச்சடங்கிற்கு பயன்படுத்துவோம் செய்தியாளர்களிடம் கூறினார்.

# உலக ஞாபக சக்தி போட்டியில் மீண்டும் முதன்மை இடத்தை பிடித்தார்.




புதுச்சேரி, நவ. 12–

உலக ஞாபக சக்தியில் முதன்மையாக உள்ளவரை (World Memory Champio nship 2025) தேர்ந்தெடுக்கும் போட்டி மும்பையில் சமீபத்தில் நவம்பர் 7 முதல் 9 தேதி வரை நடைபெற்றது.

இந்தியா உள்பட 30 நாடுகளின் ஞாபக திறன் போட்டியில் பல்வேறு போட்டிகளில் வென்ற போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேச ஞாபகத் திறன் அமைப்பு (Interna tional Association of Memory IAM) இந்தப் போட்டியை நடத்தியது.

இந்தியா சார்பாக ஞாபக சக்தி திறனில் ஏற்கனவே உலக சாதனை புரிந்த புதுச்சேரி முதலியார்பேட்டை, அனிதா நகரைச் சார்ந்த பொறியியல் கல்லூரி மாணவர் விஷ்வா ராஜ்குமார் அவர்கள் இந்த உலக ஞாபக சக்தி போட்டியில் மீண்டும் முதன்மை இடத்தை பிடித்தார். இந்த ஆண்டிலேயே ஏற்கனவே நடைபெற்ற உலக சாதனை போட்டி இணைய வழியாக நடைபெற்றது. தற்போது மும்பையில் நடைபெற்ற போட்டி நேரடியாக நடைபெற்றது.

உலக சாதனை பட்டத்தை வென்ற விஷ்வா ராஜ்குமார் அவர்களை பாரதிய ஜனதா கட்சி நிர்வாகி க.வெற்றிச்செல்வம் நேரில் சென்று பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

விஷ்வா ராஜ்குமார் அவர்களின் பெற்றோருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# புதுச்சேரி மகளிர் காங்., நிர்வாகிகளின் வீடியோவை சமூக வலை தளத்தில் இருந்து நீக்க புகார்



புதுச்சேரி: நவ.12–

மகளிர் காங்., நிர்வாகிகளின் வீடியோவை சமூக வலைதளங்களில் இருந்து நீக்க வேண்டும் என, சைபர் கிரைம் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. என்.ஆர்.காங்., பா.ஜ., கூட்டணி அரசின் மின்சார கட்டண உயர்வை கண்டித்து, புதுச்சேரி இண்டியா கூட்டணி சார்பில், கடந்த 4ம் தேதி போராட்டம் நடந்தது. இதில், மாநில மகளிர் காங்., நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மகளிர் காங்., தலைவி நிஷா, பத்திரிக்கையாளர்களிடம் என்.ஆர். காங்., பா.ஜ., கூட்டணி அரசின் அட்டூழியங்கள் பற்றி பேட்டி அளித்தார்.

அந்த பேட்டியின் வீடியோ படங்களை ஜே.சி.எம்., மக்கள் பேரவைக்கு ஆதரவாக பேட்டி கொடுப்பது, போன்று சித்தரித்து, பேரவை நிர்வாகிகள் சிலர் தவறான வதந்திகளை சமூக வலைதளங்களில் வெளியிட்டு, பரப்பி வருகின்றனர்.

அதற்கு, ஜே.சி.எம். பேரவை அமைப்பாளர் சார்லஸ் மார்ட்டின் மற்றும் ரீகன் ஜான்குமார் ஆகிய இருவரும், மகளிர் காங்., நிர்வாகிகளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். மேலும், சமுக வலைதளங்களில் இருந்து வீடியோ, படங்களை நீக்கி, பரப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மகளிர் காங்., தலைவி நிஷா தலைமையில், மகளிர் அணி நிர்வாகிகள் நேற்று சைபர் கிரைம் இன்ஸ்பெக்டர் தியாகராஜனிடம் புகார் அளித்தனர்.




விழுப்புரம்மாவட்டம் செஞ்சிவட்டம் வல்லம் ஊரட்சி ஒன்றியம் நாகந்துார் கிராமத்தில் பழங்குடியின இருளர் சமூக மக்களுக்கு அரசு இலவச வீட்டுமனை பட்டா மற்றும் வீடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது அரசு இலவச வீட்டுமனை வழங்க முடிவு செய்துள்ள இடம் நாகந்துார் கிராமத்தில் இருந்து 3 கிலோமீட்டர் துாரம் தள்ளி உள்ளது இதனால் குழந்தைகள் அங்கன்வாடி மற்றும் பள்ளி கூடங்களுக்கு நடந்தே வரவேண்டிய சூழல் உள்ளது இதனால் மக்கள் இன்னல்படும் நிலை ஏற்பட்டது இதனால் இன்று பாதிக்கப்பட்ட பழங்குடியின மக்களுடன் சென்று திண்டிவனம் சார் ஆட்சியர் மற்றும் சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் இருவரையும் சந்தித்து மக்களின் குறைகளை எடுத்து கூறி நாகந்துார் கிராமத்திலயே இலவச வீட்டுமனை பட்டா 3செண்டும் வீடும் வழங்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைத்தோம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்கள் களத்தில் நிர்வாகிகள் வீ. வீரமணி மாநில துணை தலைவர் சட்ட புலிகள் பேரவை யுவராஜ் மாநில இளைஞரணி செயலாளர் சட்ட புலிகள் பேரவை தேவதாஸ் மாவட்ட பொருளாளர் சட்ட புலிகள் பேரவை கலந்து கொண்டனர் நன்றி வணக்கம் ஜெய்பீம் இவண் போராளி சே. சத்தியராஜ் நிறுவனதலைவர் சட்ட புலிகள் பேரவை துணை ஒருங்கிணைப்பாளர் டாக்டர் அம்பேத்கர் இயக்கங்களின் கூட்டமைப்பு

### ஈரோடு மாவட்டம் கொடுமுடி பேரூராட்சி தலைவருக்கான தேர்தல்..

# துணைத் தலைவர் கவுன்சிலர்கள் பங்கேற்காத நிலையில் முந்தைய நிலையே தொடருமா..?







ஈரோடு. நவ12

ஈரோடு மாவட்டம் கொடுமுடி பேரூராட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற தலைவருக்கான தேர்தலில், துணைத் தலைவர் உள்ளிட்ட கவுன்சிலர்கள் பங்கேற்கவில்லை. இதனால் தலைவராக முன்பு இருந்தவரே அந்தப் பதவியில் தொடர்வாரா..,? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஈரோடு மாவட்டம் கொடுமுடி தேர்வு நிலை பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளது. இதில் எட்டு வார்டு கவுன்சிலர்கள் திமுகவை, மேலும் காங்கிரஸ் கவுன்சிலர்கள் மூன்று, சுயேச்சை கவுன்சிலர்கள் மூன்று பேரும் உள்ள நிலையில் அதிமுக சார்பில் ஒரு கவுன்சிலர் உள்ளனர். இதன்படி தலைவர் உள்ளிட்ட 15 கவுன்சிலர்கள் இந்த பேரூராட்சியில் கவுன்சிலராக உள்ளனர்.

இந்த நிலையில் தலைவருக்கும், துணைத் தலைவர் மற்றும் அவரது ஆதரவு கவுன்சிலர்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு இரு குழுக்களாக பேரூராட்சி நிர்வாகத்தில் இவர்கள்.

இந்த நிலையில் தலைவர் திலகவதி சுப்பிரமணியன் மீது பல்வேறு ஊழல் மட்டும் முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டை அவரது எதிர்ப்பு மனநிலையில் உள்ள கவுன்சிலர்கள் முன்வைத்து பேரூராட்சி மன்ற கூட்டத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருவது வழக்கமாக இருந்து வந்தது.

இந்த நிலையில் பேரூராட்சித் தலைவர் திலகவதியின் கணவர் சுப்பிரமணி மற்றும் துணைத் தலைவர் ராஜா கமல்ஹாசன் உள்ளிட்ட சிலர் ரியல் எஸ்டேட், கட்டப்பஞ்சாயத்து உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் கைகோர்த்து வலம்.

இதனடி இருவருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பு அரசியல் மற்றும் பேரூராட்சி நிர்வாகத்திலும். எதிரொலித்தது. பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு பரஸ்பரம் இரு தரப்பினரும் ஒருவர் ஒருவர் அடையாளம் காட்டினர் ,

இந்த நிலையில் மோதல் முற்றியதால், பேரூராட்சி மன்ற தலைவர் திலகவதி சுப்பிரமணியன் மீது துணைத்தலைவர் ராஜா கமல்ஹாசன் தரப்பு கவுன்சிலர்கள் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்தனர். கடந்த 2025 மார்ச் 21ஆம் தேதி கொண்டு வரப்பட்ட இந்த நம்பிக்கை எல்லாம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, திலகவதி சுப்பிரமணியன் தனது தலைவர் பதவியை இழந்தார்.

தொடர்ந்து சில மாதங்கள் பேரூராட்சி போர்ட் இல்லாமல் செயல் அலுவலரின் வழிகாட்டுதல் படி பேரூராட்சி நிர்வாகம்.

இந்த நிலையில் பேரூராட்சி மன்ற தலைவராக இருந்து பதவி இழந்த திலகவதி சுப்பிரமணியன் நம்பிக்கை இல்லா தீர்மானம் செல்லாது என்று கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து துணைத் தலைவர் ராஜா கமல்ஹாசன் தரப்பினரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தங்கள் கருத்துக்களை முன்வைத்து வழக்கு தொடர்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்றம் மீண்டும் தலைவர் பதவிக்கான தேர்தலை நடத்த உத்தரவு பிறப்பித்தது.

இந்த நிலையில் நேற்று நவம்பர் 11ஆம் தேதி பேரூராட்சி அலுவலகத்தில் பேரூராட்சி மன்ற தலைவருக்கான தேர்தல் நடப்பதாக அறிவிக்கப்பட்டு அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

காலை 11 மணி முதல் ஒரு மணிக்குள் இந்த தேர்தலை நடத்தும் முடிக்க வேண்டுமென உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

தேர்தல் அதிகாரியாக கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சியில் செயல் அலுவலர் சாகுல் அகமது இருந்து தேர்தலை நடத்தினார்.

இந்த நிலையில் காலை 10:30 மணி அளவில் பேரூராட்சி மன்ற தலைவருக்கான தேர்தலில் பங்கேற்க திலகவதி சுப்பிரமணியன் பேரூராட்சி மன்ற அலுவலகத்திற்கு வந்திருந்தார்.

ஆனால் எதிர் தரப்பை சேர்ந்த துணைத் தலைவர் ராஜா கமல்ஹாசன் தலைப்பை சேர்ந்த எந்த ஒரு கவுன்சிலர்களும் கூட்டத்திற்கு வரவில்லை.

இந்த பேரூராட்சி மன்ற தலைவருக்கான தேர்தலை நடத்த ஈரோடு கோட்டாட்சியர். இருந்த போதிலும் காலை முதல் மதியம் ஒரு மணி வரை பேரூராட்சி மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்ட திலகவதி சுப்பிரமணியத்தை தவிர மற்ற 14 கவுன்சிலர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதனைத் தொடர்ந்து சுமார் ஒரு மணி அளவில் அங்கிருந்து கோட்டாட்சியர் சிந்துஜா புறப்பட்டு சென்றார்.

என்னை தொடர்ந்து கொடுமுடி தேர்வு நிலை பேரூராட்சி மன்ற தலைவரா திலகவதி சுப்பிரமணியன் அந்தப் பதவியில் நீடிக்க வாய்ப்புள்ளதாக.

இது குறித்து செய்திகள் சேகரிக்க, தகவலை தெரிந்து கொள்ள பேரூராட்சி மன்ற அலுவலகத்திற்குள் சென்ற செய்தியாளர்களை அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் அதிகாரிகள் யாரையும் பார்க்க முடியாது என்று கூறி, செய்தியாளர்களை பேரூராட்சி அலுவலகத்தில் இருந்து வெளியேற்றினர்.

இதனால் செய்தியாளர்களுக்கு அடுத்த தகவல்கள் எதுவும் தெரியாமல் போனது.

தொடர்ந்து கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி நிர்வாகத்தில் என்ன நடக்கவுள்ளது என்பதனை, அந்தப் பேரூராட்சியின் செயல் அலுவலரும் பேரூராட்சி நிர்வாகமும் தான் செய்தியாளர்களுக்கும் மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

கமிஷன், கரப்சன், ஊழல் மற்றும் முறைகேடு நடந்துள்ளதாக கூறப்படும் நிலையில் கொடுமுடி தேர்வு நிலை பேரூராட்சியை, லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் உயர் அதிகாரிகள் ஒரு சிறப்பு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை.

# கோவையில் வேலவன் வந்தரா வீட்டுமனை விற்பனை துவக்க விழா!!



கோவை நவ:12

கோவை மாவட்டம் கரியாம்பாளையம் பிரிவு பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய வீட்டுமனை மிக பிரமாண்டமாக துவங்கியுள்ளது.

ஆர்.ஆர்.பில்டர்ஸ் அண்ட் டெவலப்பர்ஸ் நிர்வாக இயக்குனர் ரவிக்குமார் செய்தியாளர்களிடம் கூறுகையில் நாங்கள் மிகக் குறைந்த விலையில் பல்வேறு பகுதியில் வீட்டுமனை துவங்கி அதனை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளோம்.

அதனைத் தொடர்ந்து கோவை சத்தி சாலை கரியம்பாளையம் பிரிவு பகுதியில் வீட்டுமனை துவங்கி உள்ளோம், இவ்வீட்டுமனையானது துவக்க விழாவை முன்னிட்டு சலுகை விலையாக எழு லட்சத்தி 75 ஆயிரம் விலையில் தருகிறோம்.

அதேபோல் உடனடிக் கிரயம் செய்பவர்களுக்கு 4 கிராம் தங்க நாணயம் இலவசமாக தருகிறோம் மற்றும் திறப்பு விழாவிற்கு குடும்பத்துடன் வருகை தரும் அனைவருக்கும் ஐந்து கிராம் வெள்ளி நாணயம் பரிசாக அளிப்பதாகவும், இவ்வீட்டுமனையானது 15 ஏக்கராவில் அமைந்துள்ளது.

அதில் மூன்று சிறுவர்கள் விளையாட்டு பூங்கா மற்றும் தார் சாலை வசதிகள்,குடிநீர் வசதி,மின்சார வசதி, வீட்டுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து மிக மிக குறைந்த விலையில் நாங்கள் மட்டும் தான் தருகிறோம் என்று கூறினார். நீங்கள் அனைவரும் வாருங்கள் உங்களது நீண்ட நாள் கனவு வீட்டுமனையை எங்களிடம் தேர்ந்தெடுங்கள். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்.

# சேலத்தில் உடலில் சாயம் பூசிக்கொண்டு மனு. சாயப்பட்டறை அமைக்க எதிர்ப்பு.



சேலம். நவ.12–

சேலம் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவில் சாயப்பட்டறை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து, அப்பகுதி மக்கள் உடலில் சாயம் பூசிக்கொண்டு நூதன முறையில் ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்தனர்.

சேலம் ஜாகீர் அம்மா பாளையம் பகுதியைச் சேர்ந்தோர் ஆட்சியர் அலுவலகத்தில் அளித்த மனுவில், சேலம் ஜாகீர் அம்மாபாளையம் பகுதியில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா என்ற பெயரில் 50க்கும் மேற்பட்ட சாயப்பட்டறைகள் அமைக்க திட்டமிடப்படுகிறது. சாயப்பட்டறை கள் அமைய உள்ள பகுதிகளில் நிலம், நீர், காற்று மாசுபாடு ஏற்பட்டு புற்றுநோய், தோல் சம்பந்தமான நோய்கள் அதிக அளவில் வரவாய்ப்புள்ளன.

மேலும், சாயப் பட்டறை அமைந்தால் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலத்தடி நீர் மாசுபடும். அன்றாட பயன்பாட்டுக்கும், குடிநீருக்கும் நீரை விலைக்கு வாங்கும் நிலை ஏற்படும். எனவே, சாயப்பட்டறை அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், ஜவுளிப் பூங்காவில் சாயப்பட்டறை அமைக்க நடவடிக்கை எடுத்தால், ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்தனர்.

# மணப்பாறை அருகே வெள்ளநீர் வேளாண் பயிர்களை சேதப்படுத்துவதை தடுக்க ஆற்றை தூர்வாரி புதிய பாலம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை.



திருச்சி. நவ. 12

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள வி.இடையபட்டி ஊராட்சியில் உள்ள பாப்பான்குளம், நாடாங்குளம் மற்றும் வீரசமுத்திரம் உள்ளிட்ட குளங்கள் காரையாறு என்ற காட்டாற்றில் வரும் வெள்ளநீரால் நிரம்புகின்றன. இக்குளங்களில் இருந்து வெளியேறும் உபரி நீர் பூசைத்தோப்பு வழியாக செல்லும் ஆற்றில் இளந்தைக் குளத்திற்குச் செல்கிறது. பூசைத்தோப்பு அருகே ஆற்றின் குறுக்கே மிகவும் அகலமான ஒன்பது கண் பாலம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் இளந்தைகுளத்திற்கு அருகே மிகவும் குறுகிய ஒருகணம் பாலமாக தரமற்ற முறையில் கட்டப்பட்டுள்ளதால் இந்த பாலத்தின் வழியாக வெள்ளநீர் செல்ல முடியாமல் ஆற்றின் கரையை உடைத்துக் கொண்டு பூசைத்தோப்பு குடியிருப்பு பகுதிகளுக்குள்ளும், அதேபோல் ஆற்றை ஒட்டி உள்ள விவசாய நிலங்களிலும் தண்ணீர் புகுந்து விடுவதால் மக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில் மழைகாலத்தின் போது கடந்த ஆண்டு வேளாண் நிலங்களை தண்ணீர் சூழ்ந்ததால் நெற்பயிர்கள் அழுகி விவசாயிகளுக்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் பாலத்தை அகலப்படுத்தினால் தண்ணீர் ஆள்றில் வேகமாகச் சென்றுவிடும் என்பதால் விவசாய நிலங்களுக்குள் தண்ணீர் புகாது என்பதால் பாலத்தை அகலப்படுத்தி பெரியபாலமா கட்டித்தருமாறு கோரி விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை கோரிக்கை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்க வில்லை என்று கூறப்படுகிறது. தற்போது மழை காலம் என்பதால் உடனடியாக ஆற்றை தூர்வாரி கரையை பலப்படுத்துவதோடு வெள்ளநீர் வேளாண் பயிர்கள் சேதப்படுத்தாத வகையில் பாலத்தை அகலப்படுத்தி தண்ணீர் தடையின்றி செல்லும் வகையில் செய்துதர நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ் நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க வட்டதலைவர் ஆர்ப்பாட்டம்.

தமிழ் நாடு அரசு அனைத்து துறைஓய்வூதியர் சங்கம் போளூர் வட்டகிளை சார்பில் மாநிலம் தழுவிய வட்டதலைவர் 5அம்ச கோரிக்கைகள் நிறைவேற்றகோரி ஆர்ப்பாட்டம் போளூர் சார்நிலை கருவூலகம் எதிரில் வட்டதலைவர் அபிபுல்லாகான் தலைமையில் 11.11.25காலை 10.30 மணிக்கு தொடங்கியது.

ஆர்ப்பாட்டம்.வரவேற்புரை பாலு வட்டசெயலாளர். ஆர்ப்பாட்ட விளக்கவுரை சி. ஜெகன்நாதன் மு. மா. து. தலைவர், வாழ்த்துரைஅ. காமராஜ்,துனைஆட்சியர்ஓய்வு குப்புசாமி, சிவக்குமார், அண்ணாமலை,பன்னீர்செல்வம், மோகன், முற்போக்கு எழுத்தாளர் சங்க மஞ்சுளா சங்கபாடல் பாடினார். 5அம்ச கோரிக்கைகள்பற்றி விளக்கி பேசினார்மாநில முன்னால்மாநில செயலாளர் சி. சுப்பிரமணியன். நன்றியுரை இராமலிங்கம் வட்டபொருளாளர்.திரளான ஓய்வூதியர்கள் கலந்து கொண்டார்கள்.

## விளையாடும் போது கருவிழி கிழிந்தவருக்கு மீண்டும் பார்வை: அகர்வால் கண் மருத்துவமனையின் அளப்பரிய சாதனை

சென்னை: நவ.12–

விளையாடும் போது கருவிழி பாதித்து பார்வை இழந்த தாம்பரம் முன்னாள் சேர்மன் மணி ஏகாம்பரத்திற்கு நவீன அறுவை சிகிச்சை மூலம் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர்கள் பார்வை கொடுத்துள்ளனர். தாம்பரம் முன்னாள் சேர்மன் மணி ஏகாம்பரம் இறகுப்பந்து விளையாடி கொண்டிருந்தபோது வலது கண்ணில் காயம் ஏற்பட்டு கருவிழி கிழிந்து பார்வை பறிபோகும் நிலைக்கு ஆளானார்.

அதை தொடர்ந்து அகர்வால் கண் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்ட அவரை பரிசோதித்த மருத்துவர்கள் பார்வை கிடைக்க 10%சதவீதம் வாய்ப்புள்ளதால் கருவிழி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

ஆனால் கருவிழி உடனே கிடைக்காது. பதிவு செய்து காத்திருக்க வேண்டும். இந்த நிலையில், அகர்வால் கண் மருத்துவமனை இயக்குனரும், மூத்த கண் மருத்துவருமான அமர் அகர்வால் பின்ஹோல் பியூபிலோபிளாஸ்டி எனப்படும் நவீன அறுவை சிகிச்சையை மேற்கொண்டு மீண்டும் பார்வை கிடைக்க செய்தார். பின்ஹோல் பியூபிலோபிளாஸ்டி அறுவை சிகிச்சையால் மறுத்தினமே கண்பார்வை கிடைத்தது. மறுவாழ்வு கிடைத்தது போல் மகிழ்ச்சி அளிப்பதாக மணி ஏகாம்பரம் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள கோடிக்கணக்கானோர் காத்திருக்கின்றனர். அத்தனை பேருக்கும் கண்தானம் பெறுவது மிக கடினமான ஒன்று அதற்கு மாற்றாக பின்ஹோல் பியூபிலோபிளாஸ்டி மூலம் மீண்டும் பார்வை கிடைப்பது வர பிரசாதமாக பார்க்கப்படுகிறது.

# அரியலூர் சிலிண்டர் ஏற்றி வந்த லாரி விபத்தில் லாரியில் இருந்த சிலிண்டர்கள் வெடித்து சிதறின



திருச்சியில் இருந்து அரியலூர் நோக்கி சிலிண்டர் ஏற்றி வந்த கனக வாகனம் அரியலூர் மாவட்டம் வாரணவாசி பிள்ளையார் கோவில் வளைவில் திரும்பும் போது விபத்து ஏற்ப்பட்டுள்ளது. இதில் ஏற்பட்ட உராய்வின் காரணமாக லாரியில் இருந்த சிலிண்டர்கள் அனைத்தும் வெடித்து சிதறின இதன் காரணமாக லாரி முற்றிலும் எரிந்து சேதம் அடைந்தது இதனால் பல கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பாலும் சத்தம் கேட்ட வண்ணம் உள்ளது இந்த வண்டி எங்கிருந்து எங்கு சென்றது ஓட்டுனர் யார் எந்த எண்ணை நிறுவனத்திற்கு சொந்தமான வாகனம் என்பது குறித்து தெரியவில்லை எனினும் அரியலூர் தீயணைப்புத் துறையினர் தீயை அணைக்கும் பணியிலும் மேலும் சிலிண்டர் வெடித்து சிதறுவதை தடுக்கும் வகையில் பணியில் ஈடுபட்டுள்ளனர்

# சிறப்பு வாக்காளர் திருத்த பணியை கைவிட கோரி

## புதுச்சேரியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்



புதுச்சேரி, நவ. 12–

தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 12 மாநிலங்களில் இந்திய தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் சீராய்வு பணியை மேற்கொண்டுள்ளது. தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் சீராய்வு பணி தேவையற்றது. ஜன நாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்ப தாகவும், உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுவதாக மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

அதோடு சிறப்பு வாக்காளர் திருத்த பணியை தேர்தல் ஆணையம் உடனே கைவிட வலியுறுத்தி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் இன்று புதுச்சேரி பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் திமுக மாநில அமைப்பாளர் சிவா, காங்கிரஸ் மாநில தலைவர் வைத்திலிங்கம் எம்.பி., முன்னாள் முதல் அமைச்சர் நாராயணசாமி, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் ராமச்சந்திரன், விடுதலை சிறுத்தைகள் முதன்மைச் செயலாளர் தேவ பொழிலன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

மதிமுக மாநில செயலாளர் ஹேமா. பாண்டுரங்கன், மக்கள் நீதி மய்யம் பொதுச்செயலாளர் சந்திரமோகன், கம்யூனிஸ்ட் பாலசுப்ரமணியன், மனிதநேய மக்கள் கட்சி பஷீர் அகமது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் முகமது அலி, திராவிடர் கழகம் வீரமணி, முன்னாள் அமைச்சர்கள் ஷாஜஹான், கந்தசாமி, திமுக அவைத்தலைவர் எஸ்பி சிவக்குமார், எம்எல்ஏக்கள் நாஜிம், அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், நாக தியாகராஜன், முன்னாள் எம்எல்ஏக்கள் மூர்த்தி, அனந்தராமன், நாரா.கலைநாதன். தொகுதி பொறுப்பாளர்கள் கோபால், கார்த்திகேயன், டாக்டர் நித்தீஸ் மற்றும் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்று வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

**இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...**

# இரண்டு சமூகத்திற்கும் ஒரே ஜாதி பெயர் வைக்க கோரிக்கை...

## குறிஞ்சியர் முன்னேற்ற பேரவை மாநில தலைவர் சந்திரசேகரன் தமிழக முதல்வருக்கு கோரிக்கை...





ஈரோடு,நவ. 12

தமிழக முதல்வருக்கு அனுப்பி உள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,..

தமிழ்நாட்டில் வாழும் சுமார் 30 லட்சம் மக்கள் தொகை கொண்ட போர்வீக பழங்குடி இனமான குறவர் சமூகம் சார்பாக இந்த மனுவை தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கிறோம்.

குறவர் சமூகம் மற்றும் நரிக்குறவர் சமூகம் இரண்டும் ஒன்று அல்ல. நாடார், யாதவர், பள்ளர், பறையர் எவ்வாறு வெவ்வேறு சமூகங்களோ அதுபோல் குறவர், நரிக்குறவர் ஆகிய இரண்டும் வெவ்வேறு சமூகம் ஆகும். இவர்களின் வரலாறு, சமுதாய அமைப்பு, பழக்கவழக்கம், கலாச்சாரம் வழிபாட்டு முறைகள் மற்றும் மொழி போன்றவை முற்றிலும் வேறுபட்டவை.

இந்த இனத்தைச் சேர்ந்த( குறவர் இனம் ) மலையும் மலை சார்ந்த இடங்களான குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த பூர்வீக தமிழர் குடிகள் ஆவோம். தாழ்த்தப்பட்ட மக்கள் பட்டியலில் சீரியல் எண் 36 இல் குறவன் என குறிப்பிட்டுள்ளோம்.

நாங்கள் தமிழை தாய் மொழியாக கொண்ட மனித சமுதாயத்தின் முதல் குடி * மூத்த குடி என்ற சொற்றொடருக்கு சொந்தக்காரர்கள் ஆகும். தமிழர் கடவுள் முருகப்பெருமானின் மனைவி குற மகள் வள்ளி எங்களது குறவர் இனத்தை சேர்ந்த பெண் என்பது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்களில் இருந்து ( சிலப்பதிகாரம் சீவக சிந்தாமணி, ( பெரியபுராணம் ) திரிகூட ராசப்ப கவிராயர், பதினெட்டாம் நூற்றாண்டில் படைத்த சிற்றிலக்கியங்கள் நூல் குற்றாலக் குறவஞ்சி வரை எங்கும் குறவர் சமூகத்தின் தனித்துவ அடையாளம் விளக்கப்பட்டுள்ளது. நாங்கள் குன்றுகளில்( மலை சார்ந்த இடங்களில் )வாழ்ந்து வந்ததால் குன்றவர் என அழைக்கப்பட்டு பின்னர் அந்த சொல்லில் இருந்து என மறுவி குறவர் என பெயர் நிலைத்தது.

குஜராத் மகாராஷ்டிரா குஜராத் மகாராஷ்டிரா போன்ற வடமாநிலங்களில் இருந்து வாழ்வாதாரம் தேடி இடம் பெயர்ந்து தமிழகத்தில் கொடியேறியவர்கள் ஆவார்கள். இவர்கள் 2022 இல் அட்டவணை பழங்குடிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். நரிக்குறவர் நாடோடி தன்மை கொண்ட அலைகுடி சமூகமாகும் இவர்களின் பூர்வீகம் தமிழகம் அல்ல இவர்கள் மலைவாழ் மக்களும் அல்ல. வேறு மாநிலங்களில் இருந்து வாழ்வாதாரம் தேடி தமிழகத்திற்கு வந்த இடம் பெயர்ந்தோர் ஆவார். வேறு மாநிலங்களில் அக்கி பிக்கி, நக்கலேஷ், வாக்கிரி வாலா போன்ற பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர் தமிழகத்தில் இவர்களுக்கு குருவிக்காரர் என்ற பெயர் உண்டு. நாள் 1957 முதல் இவர்களுக்கு நரிக்குறவர் என்ற பெயர் வழங்கப்பட்டது. நரிக்குறவர் என்ற அந்தப் பெயர் எவ்வாறு குருவிக்காரர் மக்களுக்கு வழங்கப்பட்டது என்பது தெரியவில்லை.

இவ்வாறாககுறவர் என்பவர்கள் தமிழகமண்ணில் பூர்வீக குடிகள் ஆவர். நரிக்குறவர்கள் வேறு மாநிலத்தில் இருந்து, இங்கு வந்து. இரண்டும் வெவ்வேறான ஒன்றுக்கு ஒன்று எந்தவித தொடர்பும் இல்லாமல் இரு வேறு. ஜாதிகள் ஆகும்.

ஆனால் இந்த அடிப்படையான உண்மை விவரங்கள் அறியாத அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் பொதுவெளியில் இந்த இரண்டு சமூகங்களையும் இணைத்தே பேசுகிறார்கள். நரிக்குறவர் என்ற பெயரில் குறவர் என்ற சொல் பின் ஒட்டக இணைந்து இருப்பதால் அரசு அலுவலர்களும், அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் பொதுமக்களும் குழப்பம் அடைகிறார்கள். இதனால் இந்த இரண்டு பிரிவினரும் ஜாதி சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கும் போது சரியான சான்றிதழ் வழங்குவதில் குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்படுகிறது. குறவன் என சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக் கும்போதுஇந்தவிண்ணப்பதாரர் நரிக்குறவராக இருப்பாரோ என்று சந்தேகிக்கின்றனர்.

அதேபோல் நரிக்குறவர் என்று விண்ணப்பித்தால் இவர் குறவராக இருப்பாரோ இவருக்கு எப்படி எஸ் டி சான்றிதழ் வழங்குவது..? என்று அரசு அலுவலகங்களில் ஒரு குழப்பமான சூழ்நிலை. இதனால் காலப்போக்கில் இங்கு தமிழகத்தில் பூர்வீகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அசல் குறவர் இன மக்களின் சமூக அடையாளம் மிகவும் பாதிக்கப்படுகிறது. குறவர், நரிக்குறவர் இரண்டும் ஒன்றே என்ற நிலை. அதை எங்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஒரே பெயரில் இரண்டு சாதிகள் இருக்க முடியாது, ஆனால் இங்கு இரண்டு வெவ்வேறு சாதியினர் ஒரே பெயரை கொண்டுள்ளனர்.

குறவர் என்ற பெயர் நரிக்காரர் மக்களுக்கு இணைப்பு பெயராக கொடுக்கப்பட்டு ( நரி+ குறவர் ) என்று அழைக்கப்படுகிறார்கள். 1957ல் நடந்த இந்த தவறு இன்னும் சரி செய்யப்படாமல் ஒவ்வொரு அரசும் கடந்து செல்கிறது.

பார்வையில் கண்ட தமிழ்நாடு அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், அரசாணை என்.,. 6..11/1/2011 மூலம் நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர்கள் இரண்டும் இரண்டும் ஒரே சமூகம் என ஊர்ஜிதம் ஆகியுள்ளது எனவே அவர்கள் குருவிக்காரர் என்பே அழைக்கப்படலாம். இதனால் அவர்களுக்கு எந்த உரிமை இழப்பும் கிடையாது. அவர்கள் எஸ்டி சான்றிதழ் பெறுவதிலும் எந்த சிக்கலும் இல்லை. குருவிக்காரர் என்று அழைக்கப்படுவதில் அவர்களுக்கும் எந்தவித மாறுபட்ட கருத்தும் இருக்க வாய்ப்பு இல்லை. அதே சமயம் எங்கள் குறவன் சமூகமும் தமது அடையாளத்தை நிலை நிறுத்திக் கொள்ள முடியும்.

ஆகையால் தமிழக முதல்வர் அவர்கள் இந்த விஷயத்தில் தலையிட்டு, மேற்படி அரசாணையில் காட்டப்பட்டுள்ள நரிக்குறவர் என்ற பெயரை நீக்கி அவர்களை குருவிக்காரர் என அழைக்க அனுமதித்து உத்தரவு வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். இந்த செயல்பாடு மூலமாக செயல்பாடு மூலமாக எங்கள் குறவன் சமூகத்தின் அடையாளத்தை பாதுகாக்கும் விதமாக அமைய சமூக நீதி அரசு, நீதி வழங்கி எங்களுக்கான சமூக நீதியை உறுதிப்படுத்தும் படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தமிழ்நாடு குறிஞ்சியர் முன்னேற்ற பேரவை மாநில தலைவர் சந்திரசேகரன் தனது மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பான வாக்காளர் விழிப்ணர்வு நடை பயண பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் துணை ஆட்சியர் இராஜேஸ்ரி கவி, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் திருமலை, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் சுரேஷ், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் சுல்தான் சிக்கந்தர், தனி வட்டாட்சியர் ஸ்ரீகாந்த் உட்பட பலர் உள்ளனர்.

# தேசிய கல்வி தின விழாவில் ஒரே பள்ளியில் பயிலும் 8 இரட்டையர் மாணவர்களுக்கு பரிசுகள்



வந்தவாசி, நவ 12:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் தேசிய கல்வி தின சிறப்பு உரையரங்கம் மற்றும் இரட்டையர் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்வு ஊராட்சி ஒன்றிய கிழக்கு தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை ஆ.சித்ரா தலைமை தாங்கினார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் முன்னிலை வகித்தார். பள்ளி ஆசிரியை கண்மணி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, வந்தவாசி தீயணைப்பு நிலைய அலுவலர் மு.பிரபாகரன் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். தேசிய கல்வி தினம் டாக்டர் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின் பிறந்த நாளை நினைவுக்கூறும் வகையில் தேசிய அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. கல்வியே வாழ்க்கையின் திறவுகோல் ஆகும். எனவே அனைத்து மாணவர்களும் நல்ல முறையில் படித்து வாழ்க்கையின் உச்ச நிலையை தொட வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் இப்பள்ளியில் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற 8 இரட்டையர்களுக்கு புத்தகங்கள் மற்றும் எழுது பொருள்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலைஞர் முத்தமிழ்ச் சங்க செயலாளர் முகமது ஜியா, பள்ளி எஸ்எம்சி ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# முத்த குடிமக்களின் நல்வாழ்விற்காக ஓசூரில் அன்புச்சோலை திட்டம் துவக்கம்

## *காணொலி மூலம் முதல்வர் துவக்கி வைத்தார்



ஓசூர் :நவ.12–

ஓசூரில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை உறுதி செய்யும் வகையில், அன்புச்சோலை திட்டத்தினை காணொலி காட்சி வாயிலாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை உறுதி செய்யும் வகையில், தமிழகத்தில் அன்புச் சோலை திட்டத்தினை, நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

திருச்சியில் நடைபெற்ற விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ், 10 மாநகராட்சிகளில் தலா 2 மையங்கள் மற்றும் தொழில்மாவட்டங்களான கிருஷ்ணகிரி உள்ளிட்ட 25 இடங்களில், ரூ.10 கோடி மதிப்பிலான அன்புச் சோலை மையங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, ஓசூர் மாநகராட்சி பகுதியில், தர்கா அருகில் உள்ள நகர்ப்புற வாழ்வாதார இயக்க கட்டிடத்தில், ஆராதனா தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட உள்ள அன்புச்சோலை மையத்தினை, கலெக்டர் தினேஷ்குமார், பிரகாஷ் எம்எல்ஏ, மேயர் சத்யா ஆகியோர் குத்துவிளக் கேற்றி துவக்கி வைத்து, முதியோர்களுக்கு சால்வை அணிவித்து, பரிசு பொருட்களை வழங்கினர்.

இதுகுறித்து கலெக்டர் தினேஷ்குமார் கூறியதாவது: மூத்த குடிமக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதிப்படுத்தும் வகையில், தமிழக முதல்வரால் மாநகராட்சிகள், தொழில் மாவட்டங்கள் என மொத்தம் 25 இடங்களில் அன்புச்சோலை மையங்கள் துவங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொழுதுப்போக்கு அம்சங்கள், யோகா, நூலகம் மற்றும் இயன்முறை மருத்துவ சேவைகள் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தர்கா அருகில் உள்ள நகர்ப்புற வாழ்வாதார இயக்க கட்டிடத்தில், ஆராதனா தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட உள்ள அன்புச்சோலை மையம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும் இந்த மையத்தில், பகல்நேர பராமரிப்பு உதவி, அத்தியாவசிய மருத்துவ பராமரிப்புகள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படும்.

இந்த திட்டத்தின் மூலம், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பயனடைவார்கள். ஒவ்வொரு அன்புச்சோலையிலிருந்தும், குறைந்தது 50 முதியவர்கள் பயனடைவார்கள். பகல் நேரத்தில் முதியவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழல் உறுதி செய்யப்படும். மூத்த குடிமக்கள் தங்கள் வயதினருடன் ஒன்றிணைவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

பகல் நேரத்தில் தனிமையில் அவதிப்படும் முதியவர்களுக்கு அறுதல் அளிக்கவும், மூத்த குடிமக்களிடையே சமூக தொடர்புக்கான சூழலை உருவாக்கவும், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் முதன்மை ம பராமரிப்பாளர்களுக்கு மன அமைதியை வழங்க, அவர்களின் அன்புக்குரியவர்கள் நன்கு பராமரிக் கப்படுகிறார்கள் என்பதை உறுதி செய்யப்படும்.

மேலும், குறிப்பிட்ட நாளில் மையத்திற்கு வருகை தரும் முதியவர்களுக்கு, மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகளை இந்த மையம் வழங்கும். விரிவான பராமரிப்பை உறுதி செய்வதற்காக, தகுதி வாய்ந்த பராமரிப்பாளர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் உடல் சிகிச்சையாளர்கள் பணியமர்த்தப்படுவர். முதியோர்களுக்கான சுகாதார பரிசோதனைகளுக்கு, அருகிலுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களின் சேவைகள் பயன்படுத்தப்படும்.

இவ்வாறு கலெக்டர் கூறினார். பின்னர், அன்புச்சோலை மையத்தில் உள்ள தங்கும் அறைகள், சமையலறை ஆகியவற்றையும், பொழுதுபோக்கு அம்சங்களையும், நவீன பிசியோதெரபி உபகரணங்களையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், ஓசூர் சப்கலெக்டர் ஆக்ரிதி சேத்தி, துணை மேயர் ஆனந்தய்யா, மாவட்ட சமூகநல அலுவலர் சக்தி சுபாஷினி, மண்டலக்குழு தலைவர்கள் மாதேஸ்வரன், ரவி, தாசில்தார் குணசிவா, ஆராதனா தொண்டு நிறுவன நிர்வாகி ராதா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை. தேர்வு வினாத்தாள் மாறிய விவகாரத்தில் 4 பேருக்கு நோட்டீஸ்!!

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை. தேர்வு வினாத்தாள் மாறிய விவகாரத்தில் 4 பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. வினாத்தாள் தயாரித்த ஆசிரியர்கள் குழு. சரிபார்த்த பேராசிரியர் குழு உட்பட 4 பேருக்கு பல்கலை. நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. நவ.6ம் தேதி நடைபெற்ற பி.காம். 3ம் ஆண்டு மாணவர்களுக்கான வினாத்தாள் மாறி இருந்தது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421